# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 08.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். NC 733/F/2023 (SA 5736/C/2022)**

திரு.கா.சந்தனகாந்த் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருக்கோவிலூர் வட்டம்,
கள்ளக்குறிச்சி-605757. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தால் 16.09.2022 அன்று SA 5736/C/2022 வழக்கில் விசாரணை செய்யப்பட்டு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

“மனுதாரரால் சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் கோரியுள்ள தகவல்கள் என்பது திருக்கோவிலூர் வட்டாட்சியர் அலுவலகம் தொடர்புடைய தகவல்கள் என்பதால் பொதுத்தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருக்கோவிலூர் அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கப்பட்ட வாதத்தின் அடிப்படையில், பொதுத்தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருக்கோவிலூர் அவர்கள் இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் மனுதாரர் 6(1)ன் கீழ் கோரியுள்ள திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியம், ஆலூர் மதுரா துலாம்பூண்டி கிராமம், சர்வே எண்.186/2ல் ஆக்கிரமிப்பு என அதே கிராமத்தைச் சார்ந்த வேலுமயில் த/பெ முனுசாமி மற்றும் 10 நபர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண்.18437/2010-ல் நடையக்கவுண்டர் மகன் காளிக்கவுண்டர் உள்ளிட்ட எத்தனை நபர்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது உள்ளிட்ட 9 இனங்களுக்கான தகவல்களை வழங்கும் பொருட்டு, முன்னரே மனுதாரருக்கு கடிதம் வாயிலாக தொடர்பான ஆவணங்களை அலுவலக நேரத்தில் தகவல் பெறும் உரிமைச்சட்டம் உ005, பிரிவு 2(j)ன்படி பார்வையிட்டு குறிப்பெடுத்துக்கொள்ள தெரிவித்தும் அனுமதித்தும், அவருக்கு அத்தியாவசியமாக தேவைப்படும் ஆவணங்களின் நகலை அவர் 100 பக்கங்களுக்கு மிகாமல் எழுதிக் கோரினால் மனுதாரருக்கு தகவல்களை கட்டணம் ஏதுமின்றி (100 பக்கத்திற்கு மேல்

எனில், பக்கத்திற்கு ரூ.2/- வீதம் மனுதாரர் செலுத்தும் பொருட்டு), அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பமிட்டு, மனுதாரருக்கு நேரில் அல்லது பதிவஞ்சலில் வழங்கி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான அறிக்கையின் நகலினை இவ்வாணையத்திற்கு அனுப்பிவைக்க பொதுத்தகவல் அலுவலருக்கு உத்தரவிடுகிறது".

2. மேற்சொன்ன ஆணை நிறைவேற்றப்படவில்லையென்று தெரிவித்து மனுதாரர் 16.03.2023 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பிய ஆணை நிறைவேற்றாமை மனு ஆணையத்தால் பெறப்பட்டு NC 733/F/2023 ஆக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் ஆணை நிறைவேற்றாமை மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு (08.07.2026) இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

3. இன்றைய (08.07.2026) நேரடி விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7(2)-ன்கீழ் மனுதாரர் ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத்தகவல் அலுவலர் திருமதி.ச.புவனேஸ்வரி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருக்கோவிலூர் அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

4. இன்றைய விசாரணையின் போது ஆணையத்தின் மேற்சொன்ன 16.09.2022 தேதியிட்ட ஆணை நிறைவேற்றப்படாதது குறித்து, பொதுத்தகவல் அலுவலரிடம் விசாரணை செய்த போது பொதுத்தகவல் அலுவலர் மனுதாரர் 09.12.2022 நாளிட்ட கடிதம் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தகவல்களைப் பெற்று மனுதாரர் மனநிறைவு கடிதம் வழங்கியிருப்பதாகவும் கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் மனுதாரர் தனது கருத்துகளையும் வாதுரைகளையும் தெரிவிக்க அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டும் இன்றைய விசாரணைக்கு ஆஜராக தவறியுள்ளார். ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்களை உறுதி செய்தும் மற்றும் மனுதாரர் கோரியுள்ள 9 இனங்களுக்கான தகவல்களைப் பெற்றுக்கொண்டதாக மனநிறைவு கடிதம் வழங்கியுள்ளதையும் கருத்தில் கொண்டும் இவ்வழக்கின் மீதான விசாரணையை இவ்வாணையம் முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். NC 733/F/2023 (SA 5736/C/2022)</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருக்கோவிலூர் வட்டம்,
**கள்ளக்குறிச்சி**-605757.

**<u>மனுதாரர்</u>**
திரு.கா.சந்தானகாந்த்,
துலாம்பூண்டி கிராமம்,
ஆலூர் ஊராட்சி,
மேமாளூர் அஞ்சல்,
திருக்கோவிலூர் ஒன்றியம்,
**கள்ளக்குறிச்சி** - 605751.

Copy to file: KR/PA